ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு திணைக்களம் |
| --- | --- |
| திகதி | 2025 ஏப்பிறல் 29 |

**2024ஆம் ஆண்டுக்கான நிதியியல் அறிக்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் அறிக்கையை இலங்கை மத்திய வங்கி வெளியிடுகின்றது**

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 99(2)ஆம் பிரிவின் கீழான தேவைப்பாடான 2024ஆம் ஆண்டிற்கான *இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கைகள் மற்றும் தொழிற்பாடுகள்* எனும் வெளியீடு சனாதிபதியும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான அதிமேதகு அநுர குமார திசாநாயக்க அவர்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர். பி நந்தலால் வீரசிங்க அவர்களினால் இன்று அதாவது, 2024 ஏப்பிறல் 29 அன்று கையளிக்கப்பட்டது.



சனாதிபதியின் செயலாளர் முனைவர். என். எஸ். குமநாயக்க, இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளர் திருமதி. லசந்தி சிறிமான்னே மற்றும் கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. சமுத்ரா ஜயசுந்தர ஆகியோரும் இந்நிகழ்வில் பிரசன்னமாகியிருந்தனர்.

**உள்ளடக்கம் பற்றிய குறிப்பு:**

இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் - 2024 வெளியீடானது 2024ஆம் ஆண்டுகாலப்பகுதியில் மத்திய வங்கியின் நிறுவனசார் செயலாற்றம் பற்றிய கண்ணோட்டமொன்றை வழங்குகின்றது. இவ்வெளியீடு மூன்று முக்கிய கூறுகளாக அதாவது தொழிற்பாட்டு நுண்நோக்குகள், நிதியியல் கூற்றுகள் மற்றும் துணைத் தகவல்கள் என கட்டமைக்கப்பட்டுள்ளது.

தொழிற்பாட்டு நுண்நோக்கானது உள்நாட்டு விலை உறுதிப்பாட்டைப் பேணுதல், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்தல், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை மேற்பார்வை செய்தல், நாணய வழங்கலை முகாமைசெய்தல் அத்துடன் உபாய ரீதியான தொடர்பூட்டல் என்பன உள்ளடங்கலாக மத்திய வங்கியின் உபாயம் மற்றும் அதன் மையப் பொறுப்புக்கள் பற்றி எடுத்துரைக்கின்றது. வங்கியின் பன்னாட்டு ஈடுபாடுகள், முகவராண்மைத் தொழிற்பாடுகள் மற்றும் உள்ளக முகாமைத்துவ ஏற்பாடுகள் உள்ளடங்கலாக வேறு பொறுப்பளிக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுதல் என்பவற்றையும் இப்பிரிவு உள்ளடக்குகின்றது.

நிதியியல் கூற்றுக்கள் பிரிவானது 2024 திசெம்பர் 31 முடிவுற்ற ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமத்துடன் இணங்கும் நிதியியல் கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுயாதீன அறிக்கையுடன் சேர்த்து எடுத்துரைக்கின்றது. இப்பிரிவு நிதியியல் மீளாய்வொன்றினையும் உள்ளடக்கி ஆண்டுகாலப்பகுதியில் வங்கியின் நிதியியல் செயலாற்றம் பற்றி பகுப்பாய்வினை வழங்குகின்றது.

துணைத் தகவல்கள் பிரிவானது வங்கியின் பிராந்திய ரீதியான பிரசன்னம், மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்ற நிறுவனங்களின் பட்டியல் அத்துடன் நிறுவனத் தகவல் தொகுப்பு என்பன பற்றிய விபரங்களை வழங்குகின்றது.

இவ்வெளியீட்டின் ஒன்றிணைந்த PDF பதிப்பை

https://www.cbsl.gov.lk/ta/வெளியீடுகள்/பொருளாதார-மற்றும்-நிதியியல்-அறிக்கை/நிதியியல்-அறிக்கைகள்-தொழிற்பாடுகள் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.